

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2025) சென்னை, சைதாப்பேட்டையில், கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், தாயகம் கவி, பிரபாகர ராஜா, கணபதி, அசன் மவுலானா, திராவிடர் இயக்க தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன், மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், தனசேகர், மாமன்ற உறுப்பினர்கள் சைதை பகுதிக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணைஅமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம்கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று

# எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தைச் சொல்வதா?

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

நாகர்கோவில், ஜன. 3 - ‘கன்னியாகுமரியில் உள்ள கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தை சொல்கிறார் என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.

கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி கடலில் நடுவே புதிதாக அமைக்கப்பட்ட கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் முன்னாள் அதிகாரிகளின் கருத்தை கேட்டுக் கொண்டு தவறான கருத்தை சொல்கிறார். இதேபோல் பல அறிவிப்புகளை அவர் வெளியிட்டுள்ளார்.

முதன்முதலில் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசாணை யாரும் வெளியிடவில்லை. மேலும் இந்த திட்டம் கைவிடபட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஒப்பந்தம் விடப்பட்டு கன்னியாகுமரி கடலில் நடுவே கண்ணாடி நடை பாலம் கட்டப் பட்டுள்ளது. பாலம் அமைப்பது தொடர்பாக பலமுறை இங்கு நானும், என்னுடன் பல அமைச்சர்களும், அதிகாரிகளும் ஆய்வு நடத்தி இருக் கிறோம்.



திட்டங்கள் குறித்த அறிவிப்பு யார் வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் அதற்கான மதிப்பீடு தொகை ஒதுக்குவது, பணிகளை தொடங்குவது, ஒப்பந்தம், ஆய்வு போன்றவற்றை தி.மு.க. அரசு நிறைவேற்றி உள்ளது. அவரது இருப்பிடத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எடப்பாடி பழனிசாமி அன்றாடம் இது போன்று பேசுகிறார். அவை அனைத்தும் உண்மை அல்ல. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி யில் சட்ட ஒழுங்கு பாதுகாப்பாக உள்ளது. குற்ற வழக்குகளில் யாரையும் காப்பாற்றும் நோக்கில் அரசு செயல்படவில்லை. எங்களை குறை கூறுபவர்கள் அவர்களது ஆட்சியில் சட்ட ஒழுங்கு மிக மோசமாக இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். சிலர் அரசியல் ஆதாயத் துக்காக பொய்களை சொல்லி வருகிறார்கள். அது தமிழக மக்களிடம் எடுபடாது.

இவர் அவர் அமைச்சர் எ.வ. வேலு பேட்டியளித்தார்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் – இன்று

# வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு - அமைச்சர்கள் மரியாதை !

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, ஜன. 3 - மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு: -



சுதந்திரப் போராட்ட மாவீரர் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, இன்று ( 03.01.2025 - வெள்ளிக்கிழமை ) காலை 10.30 மணிக்கு பெரியார் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், நிதி, சுற்றுச் சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்கள்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விருதுநகர் மாவட்டத்தில் அண்ணா சைக்கிள் போட்டி!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

விருதுநகர், ஜன. 3 - பேரறிஞர் அண்ணா பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் அண்ணா சைக்கிள் போட்டி 2024 நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ம் நாள் முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் அண்ணா சைக்கிள் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் 111வது பிறந்த நாளை முன்னிட்டு இப்போட்டிகள் விருதுநகர் மாவட்டத்தில் நாளை (4.1.2025-சனிக்கிழமை) காலை 7.00 மணியளவில் திருவில்லிபுத்தூரில் இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கம் திருவில்லி புத்தூர் என்ற இடத்தில் நடத்திட தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்க இந்தியாவில் தயாரான மிதிவண்டிகள் மட்டுமே உபயோகப் படுத்தப்பட வேண்டும். இப்போட்டிகள் 13 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கு 15 கி.மீ, பெண்களுக்கு 10 கி.மீ, 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு 20 கி.மீ, பெண்களுக்கு 15 கி.மீ, 17 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கு 20 கி.மீ, பெண்களுக்கு 15 கி.மீ என 3 பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு பரிசுகளும் தகுதிச் சான்றிதழ்களும் முதல் 10 இடம் பெறுபவர்களுக்கு தகுதி சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பரிசு விபரம் முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/ மூன்றாம் பரிசு ரூ.2000/ நான்கு முதல் பத்தாம் இடம் வரை ரூ.250/ வழங்கப்பட உள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்க தகுதியுள்ள பள்ளி மாணவ/ மாணவியர் தங்களது வயதுச் சான்றிதழை தலைமையாசிரியர் கையொப்பம் பெற்று நாளை (4.1.2025) காலை 7.00 மணிக்கு மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கத்தில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் ஆஜராகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மாவட்ட அளவிலான பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விரைவு சைக்கிள் போட்டிகளில் அதிக அளவில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், கேட்டுக் கொண்டுள்ளார்.

பஸ் ரூட் திருவில்லி புத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து செண்பகத்தோப்பு வரை செல்லும் பேருந்து. பேருந்து நிறுத்தம் மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கம், பேருந்து நேரம் காலை 06.30 மணி திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து.



சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவினை எட்டியுள்ள நிலையில், காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (01.01.2025) தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத்துறை சரபங்கா வடிநிலக் கோட்ட மேற்பார்வை பொறியாளர் சிவக்குமார் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

### தி.மு.க. அயலக அணி குவைத் தளபதி பேரவை சார்பில் – இன்று

# குவைத்தில் முதல்வரின் மூன்றாண்டு சாதனை விளக்க மாநாடு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – துணை மேயர் ஜி.காமராஜ் சிறப்புரை!

குவைத், ஜன. 3 - குவைத்தில் நடைபெறும் “தி.மு.க. அயலக அணி குவைத் தளபதி பேரவை” சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாட்டில்” தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணி சார்பில், இன்று (03.01.2025 - வெள்ளிக்கிழமை), மாலை 5.00 மணியளவில் “தி.மு.க. அயலக அணி மற்றும் குவைத் தளபதி பேரவை” சார்பில் நடைபெறும் “புலம்பெயர்ந்தோர் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ”மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு” குவைத், தஸ்மா டீச்சர் சொசைட்டியில் நடைபெற உள்ளது.

இம்மாநாடு குவைத் தளபதி பேரவை அமைப்புச்செயலாளர் மேட்டுப்பட்டி அ. ராஜா முஹம்மது அவர்கள் தலைமையேற்க கடியாவயல் கருப்பையா, காஜா மொஹைதீன், டேவிட், பிரசாந்த், அசோக் குமார், அமுதா மார்ட்டின், போஜன், சுப்பிரமணி, வெங்கடேசன், சரவணன், ராஜு ஆகியோர் முன்னிலை வகிக்க மதுரை காளிதாசன் வரவேற்புரையாற்றிட நாசர் நூர் முகமது நன்றியுரையாற்றிட கவிஞர் வீட்டுக்கட்டி மஸ்தான், ராணிப்பேட்டை கிளாட்வின் பாக்கியராஜ் ஆகியோர் இம்மாநாட்டு நிகழ்ச்சிகளை தொகுப்பு வழங்கிட - மாணவர் அணிச் செயலாளர் எம்ஆர் எம். நபில்ராஜா அவர்கள் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களும் - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இம்மாநாட்டில் குவைத் அயலக அணி அமைப்பாளர் சிதம்பரம் தியாகராஜன், ஜனாப் அபூபக்கர் சித்தீக், சுப்ரீம் கார்கோ அண்ட் ட்ராவல்ஸ் எதுமலை பாவாசா, அல் அவுதா சாதிக் பாஷா, கவிஞர் சம்சுதீன், வல்லம் அப்பாஸ், எரவாஞ்சேரி சாகுல் ஹமீது, கொடுந்துறை முகமது அலி, மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளான முஸ்லிம் லீக் கம்பளி பஷீர், திராவிடர் கழகம் சித்தார்த்தன், மதிமுக மணிவாசகம், காங்கிரஸ் ரசாதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மகிழன் செல்லத்துரை, த.மு.மு.க. ஜபருல்லா கான், மஜக சதக்கத்துல்லா, தமிழர் வாழ்வுரிமை சாகுல் ஹமீது, சிராஜுதீன் பி.எம்.சி.ஏ., Ktic கலீல் பாகவி, சத்தரமனை அசன் முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கிட நடைபெற உள்ளது.

மேலும், சாமி மங்களேஸ்வரன் சஜ்ஜாத் அலி கான் நூஹ் அலி அப்பாஸ் எஸ் எம் எல் குமார் இன்ஸ்பெக்டர், திருச்சி குமார் சிராஜுதீன் ஜனாப் பாய், ஆனந்த் சலூன் ஜம்ஜம் இப்ராஹிம் கே அய்யூப் பாய், டேஷ்டி ஏஎஸ் சிராஜுதீன் திரு சிவக்குமார்பாலிவுட் சீனிவாசன் அல் ஹவுதா சஹீன் தாலிப் மற்றும் கழக முன்னோடிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாட்டில்” கலந்து கொண்டு சிறப்பிக்க கடல் கடந்து வாழும் கழக உடன்பிறப்புகளை அணிதிரண்டு வருக என நிகழ்ச்சி குவைத் தி.மு.க. அயலக அணி குவைத்தளபதி பேரவை நிர்வாகிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

### அரசுப் பள்ளிகளுக்கு உதவுவதாகச் சொன்னதை தவறாகப் புரிந்து

### எங்களை கொச்சைப்படுத்தி அரசியலாக்குவதா?

# தனியார் பள்ளிகள் அரசுப் பள்ளிகளை தத்தெடுப்பதாக எங்கும் கூறவில்லை!

## தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் விளக்க அறிக்கை!

சென்னை, ஜன.3- தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் சார்பில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசு பள்ளிகளின் வளர்ச்சியில் CSR மூலம் தனியார் பள்ளிகளின் பங்களிப்பு இருக்கும் என்று தான் சொன்னோம்.

தமிழ்நாட்டிலுள்ள 13,000-க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள், மழலையர் துவக்கப் பள்ளிகள், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளிகள், சி.பி.எஸ்.இ. உள்ளிட்ட இதரவாரிய பள்ளிகள் என ஒட்டு மொத்த பள்ளிகளுக்கும் பல்வேறு சங்கங்கள் இயங்கி வந்தன. அந்த சங்கங்களை எல்லாம் ஒருங்கிணைந்து பெரும்பான்மையான சங்கங்கள் ஒன்றுகூடி தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் என்ற பெயரில் ஒரு புதிய சங்கத்தை உருவாக்கி அந்த சங்கத்தின் துவக்க விழாவிற்கு பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர், தனியார் பள்ளி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களை வாழ்த்துரை வழங்கவும் விழாவினை துவக்கி வைக்கவும் அழைத்தோம். அவர்கள் அனைவரும் வருகை தந்து விழாவினை சிறப்பித்தார்கள்.

அரசு பள்ளிகளில் பயின்ற நாங்கள் தான் தனியார் பள்ளிகளை நடத்தி வருகிறோம். நாம் அரசு பள்ளிகளுக்கு எந்த விதத்திலாவது பயன்பாடாக இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில் அந்த நிகழ்வின் போது பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றிய அதே தருணத்தில் வரும் கல்வியாண்டில் 500 அரசு பள்ளிகளை தேர்வு செய்து அருகாமையில் இருக்கிற தனியார் பள்ளிகந்த பள்ளிகளில் பயில்கிற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலே நூலகங்கள், பள்ளிக்கு வர்ணம் பூசுதல், பள்ளி விளையாட்டு மைதானங்களை சுத்தப்படுத்துதல், தூய்மைப் படுத்துதல் விளையாட்டு உபகரணப் பொருட்களை வாங்கிக் கொடுத்தல், மாணவர்களுக்குத் தேவையான இதர General knowledge என்று சொல்லக் கூடிய பொது அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தல், அதற்கான பொருட்கள் வாங்கிக் கொடுத்தல், கணிணி உள்ளிட்ட கண்டுபிடிப்புகள் சம்பந்தப்பட்ட நவீன பொருட்களை வாங்கிக் கொடுத்தல் என்று பல்வேறு வகையிலே உதவிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மாணவர்களின் வளர்ச்சிக்காக அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த CSR மூலம் தனியார் பள்ளிகளின் பங்களிப்பு இருக்கும் என்று தான் சொல்லப்பட்டதே தவிர எந்த இடத்திலும் அரசு பள்ளிகளை தத்தெடுப்போம் என்று நாங்களும் சொல்லவில்லை தத்தெடுப்போம் என்று அமைச்சர் உள்ளிட்ட அதிகாரி பெருமக்கள் யாரும் சொல்லவில்லை.

**சொல்லப்படாத வார்த்தை!**

அது சொல்லப்படாத ஒரு வார்த்தையை அரசியலாக்கி தனியார் பள்ளிகள் அரசு பள்ளிகளை தத்தெடுக்கிறதா? என்று கேட்பது உண்மையாகவே 500 பள்ளிகளுக்கு CSR மூலம் உதவ தயாராக உள்ளோம் என்று சொன்ன தனியார் பள்ளி தாளாளர்களுடைய அந்தப் பெருந்தன்மையை கொச்சைப்படுத்துவதாக உள்ளது. ஆகவே தயவுகூர்ந்து இதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். எந்த இடத்திலும் தத்தெடுக்கப்படும் என்ற வார்த்தை யாராலும் உபயோகப்படுத்தப்படவில்லை. அரசு பள்ளிகளின் வளர்ச்சிக்கு தனியார் பள்ளிகள் CSR மூலம் பங்களிப்பார்கள் உதவுவார்கள் என்று தான் சொல்லப்பட்டதே தவிர தத்தெடுக்கும் என்ற வார்த்தை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்திக் கொள்கிறோம்.

மேலும் முக்கிய குறிப்பாக 500 அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு மற்றும் மாணவர்களுக்குத் தேவையான பொருட்களை CSR மூலம் வழங்க முன்வந்துள்ள தனியார் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் முழு ஆதரவும் நன்றியும் தெரிவித்துள்ளதை இங்கே பெருமையுடன் தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தின் நிறுவனத் தலைவர் பி.டி.அரசுகுமார், மாநில பொதுச் செயலாளர்கள் கே.ஆர்.நந்தகுமார், டி.சி.இளங்கோவன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மாவட்டம், வடலூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டுள்ள சிமெண்ட் சாலையினை 29.12.2024 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன் உட்பட பலர் உள்ளனர்.